DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முனியசாமி | Caste: | |
| Father's Name: | லண்டன் | Calling: | விவசாய கூலி வேலை |
| Village: | கே.பாப்பான்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 55 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 13.08.2025

(2 முதல் 3 எதிரிகள் ஆஜர் .1ம் எதிரி ஆஜர் இல்லை. 355ன் பிரிவின் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் கமுதி தாலுகா பாப்பான்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் ராக்கம்மாள், பூமிநாதன், மலைராஜ், ஈஸ்வரி ஆகியோர்களை தெரியும். அவர்கள் பள்ளர் இனத்தை சேர்ந்தவர்கள். 2,4 எதிரிகளை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 1,3 எதிரிகளை நான் பார்த்ததில்லை. கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 6.45 மணியளவில் நான் வேலை பார்த்துவிட்டு வீட்டில் இருந்தேன். பிறகு வீட்டில் இருந்து ரோட்டு வழியாக நடந்து சென்றேன். அப்போது கூகூகூ என சத்தம் கேட்டது. நான் ஓடிப்போய் பார்த்தபோது என் அண்ணன் பூமியை முத்துமணி என்பவர் வெட்டிவிட்டதாக சொன்னார். எங்கு வைத்து வெட்டினார் என்றால் முத்துநாகு சமாதி அருகே வெட்டியதாக சொன்னார்கள். நான் அங்கு போய் பார்த்தபோது மகன்

மலைராஜ் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

என் அண்ணன் பூமிநாதனை வெட்டியதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். பூமிநாதனை யார் யார் எங்கு வைத்து வெட்டினார்கள் என்பது அவர் சொல்லித்தான் தெரியும் என்றும் அவர் என் அண்ணன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,3,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd./C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மலைராஜ் | Caste: | |
| Father's Name: | பூமிநாதன் | Calling: | ஆசிரியர் |
| Village: | கே.பாப்பான்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 36 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 13.08.2025

(2 முதல் 3 எதிரிகள் ஆஜர் .1ம் எதிரி ஆஜர் இல்லை. 355ன் பிரிவின் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)

**முதன்மை விசாரணை**

என் சொந்த ஊர் கமுதி தாலுகா பாப்பான்குளத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் நயினார்கோவில் ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்லவராயனேந்தல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன் . என் அப்பாவை வெட்டிய சம்பவ சமயம் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆசிரியராக வேலை பார்த்தேன். 2 முதல் 4 எதிரிகளை தெரியும். 1ம் எதிரியை நான் பார்த்திருக்கிறேன். எங்கள் ஊரில் கொத்தனார் வேலை பார்த்தார். ராக்கம்மாள் என் அம்மா. பூமிநாதன் என் அப்பா. சாட்சிகள் முனியசாமி, லண்டன் மகன் முனியசாமி ஆகியோர்களை தெரியும். ஈஸ்வரி என் அக்கா. நாங்கள் இந்து பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்கள். எதிரிகள் இந்து மறவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். கடந்த 07.08.2020ம் தேதி காலை 8.00 மணியளவில் எங்கள் வீட்டில் மின்சாரம் இல்லாமல் இருந்தது. என் அம்மா

என் அப்பாவிடம் எல்லார் வீட்டிலும் கரண்ட் உள்ளது நம்ம வீட்டில் மட்டும் கரண்ட் இல்லை என சொல்லியுள்ளார். அப்போது என் அப்பா யாருப்பா கரண்டை கட் பன்னது என கேட்டுள்ளார். அப்போது முருகன் மகன் சதீஷ்குமார்(2வது எதிரி) நான்தான் கரண்டை கட் பன்னினேன் நீ என்னடா செய்வ என்று என் அப்பாவிடம் வாக்குவாதம் செய்துள்ளார். ஊர்க்காரர்கள் சத்தம்போட்டு இருவரையும் அனுப்பி வைத்துள்ளார்கள். என் அப்பாவும் வீட்டிற்கு வந்துவிட்டார். என் அப்பா எப்போதும் மாலையில் கமுதிக்கு டீ சாப்பிடுவதற்காக செல்வது வழக்கம். டீ சாப்பிட்டு விட்டு என் அப்பா ஊருக்கு கமுதி சந்தை கடை பக்கம் வந்துள்ளார். அப்போது முருகன் என்பவர் இருசக்கர வாகனத்தில் வந்து என் அப்பாவிடம் நான் ஊருக்குதான் போகிறேன் ஏறிக்கொள் என்று சொலியுள்ளார் என்அப்பாவும் முருகுனும் முத்துநாகு சமாதி அருகே வரும்போது 1 முதல் 3 எதிரிகளான முத்துமணி,ராம்குமார், சசிக்குமார் அருவாள் கம்புகளுடன் நின்றுள்ளார்கள். அப்போது முத்துமணி என் அப்பாவிடம் பைக்கை விட்டு கீழே இறங்குடா பள்ளத்தேவுடியா மகனே என கூறியுள்ளார். நாங்கள் பிளேன் செய்துதான் இந்த இடத்திற்கு உன்னை வரவழைத்தோம் என்று சொல்லி கையில் இருந்த அருவாளால் வெட்டும்போது என் அப்பா வலது கையால் தடுத்துள்ளார். என் அப்பாவின் வலதுகையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. என் அப்பா வலி தாங்க முடியாமல் கத்தியுள்ளார். அப்போது பக்கதில் இருந்த அய்யனார் என்பவர் எதிரிகளை சத்தம் போட்டுள்ளார். அப்போது எதிரிகள் அருவாள் கம்புகளை கையில் வைத்துக்கொண்டு இன்னைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார்கள். என் அப்பா பயந்து ஊரை நோக்கி ஓடியுள்ளார். என் அப்பா எனக்கு போன் மூலம் தகவல் கொடுத்தார்.

நான் பைக்கை எடுத்துக்கொண்டு என் அப்பாவை கமுதி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் அம்மா பின்னாலேயே மருத்துவமனைக்கு வந்துவிட்டார். நான் மருத்துவமனையில் மருத்துவரை பார்க்க சென்றபோது என் அப்பா நடந்த விவரத்மதை என் அம்மாவிடம் சொல்லியுள்ளார். கமுதி காவல்நிலையத்திலிருந்து போலிசார் வந்துள்ளார்கள். என் அம்மாவிடம் நடந்த விவரத்தை கேட்டுள்ளார்கள். என் அம்மா நடந்த விவரத்தை சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். மருத்துவர் என் அப்பாவிற்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்றும் பலத்த காயம் என்றும் பார்க்க முடியாது என்றும் அருப்புக்கோட்டை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு பார்க்க முடியாது என்றதால் மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என் அப்பா மதுரையில் 7,8 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் தற்போது முதல்விசாரணையில் சொன்னதைத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். என் வீட்டில் மின்சாரம் இல்லாதது சம்பந்தமாக மின்சார வாரியத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. என் வீட்டிற்கு வரக்கூடிய மின்சாரத்தை 2ம் எதிரிதான் துண்டித்தார் என கமுதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. என் வீட்டிற்கு அன்றைய தினமே மின்சாரம் வந்துவிட்டது என்றால் சரிதான். எங்கள் கிராமத்தில் பல்வேறு சமுதாய மக்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். திருவிழாக்களும் அனைத்து சமுதாய மக்களும் ஒன்றுகூடி நடத்துவோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எங்கள் சமூகத்திற்கும் மறவர் சமூகத்திற்கும்

எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு நாங்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்ற விவரம் தெரியாது என்றால் தெரியும். அவர் எந்த வகுப்பை சார்ந்தவர் என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரிக்கு நாங்கள் பட்டியல் இனத்தை சேர்ந்த பள்ளர் சமூகம் என்பதை தெரியாது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா கமுதிக்கு சென்றபோது மணி எத்தனை இருக்கும் என்றால் மாலை 5.00 மணி. என் அப்பா ஊரிலிருந்து கமுதிக்கு எதில் சென்றார் என்றால் TVS Excel இருசக்கர வாகனத்தில் சென்றார். எனது அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியும் என்றால் சரிதான். எதிரிகள் என் அப்பாவை வெட்டியதாக சொல்லும் நேரம் எத்தனை மணி என்றால் மாலை 6.45. சம்பவ சமயத்தில் நான் என் அப்பா எல்லாரும் கூட்டு குடும்பமாக வசித்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் அரை கி.மீ தூரம் இருக்கும். கமுதி அரசு மருத்துவமனைக்கு சென்ற நேரம் 7–7.30 இருக்கும். என் அப்பாவை அரசு மருத்துவமனைக்கு எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன். நான் எங்கள் ஊரில் இருந்து என் அப்பாவை அரசு மருத்துவமனைக்கு கமுதி காவல்நிலையத்தை கடந்துதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நானும் என் அப்பாவும் எந்த புகாரும் கொடுக்கவில்லை. அரசு மருத்துவமனையில் என் அப்பாவை விசாரிக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் என் அப்பாவை விசாரிக்கவில்லை, என் அப்பா பேசமுடியாத நிலையில் இருநத்தால் என் அம்மாவை விசாரித்தார்கள். என் அம்மாவை விசாரிக்கும்போது மணி 8 இருக்கும். புகார் வாக்குமூலம் வாங்குவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் அரை மணி நேரம் இருக்கும். எதிரிகள்

வெட்டினார்கள் என என் அப்பா சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் அப்பா சுயநினைவுடன்தான் இருந்தார் என்றால் சரிதான். போலிசார் என் அப்பாவிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றுகொண்டபோது நானும் அறிவேன் சாட்சியாக கையெழுத்து போட்டேனா என்றால் வாக்குமூலம் பெறவில்லை. சம்பவத்தன்று போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என் அம்மாவிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கியது யார் என்றால் சார்பு ஆய்வாளர். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை 09.08.2020ம் தேதி ஒருமுறைதான் விசாரித்தார்கள். என்னை விசாரணை செய்தது யார் என்றால் டிஎஸ்பி. என்னை விசாரித்து எழுதிக்கொண்டதில் கையெழுதது வாங்கிக்கொண்டார்கள் என்றால் இல்லை. 2ம் எதிரி எங்கள் வீட்டிற்கு வரக்கூடிய மின்சாரத்தை துண்டிக்கவில்லை என்றும் எங்கள் ஊரில் நாங்கள் எல்லா சமூகத்தை சேர்ந்தவர்களும் எந்தபாகுபாடும் இன்றி ஒன்றாக வாழ்ந்து வருகிறோம் என்றும் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் சாதியை சொல்லி திட்டினால் அரசாங்கம் இழப்பீடு கொடுப்பார்கள் என்று நான் ஆசிரியர் என்பதால் தெரியும் என்பதால் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் அப்பா சொல்லியதன் பேரில் பக்கத்து ஊர்க்காரரான 1ம் எதிரி மீது அவர் எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்றுகூட தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். என் அப்பா இருசக்கரவாகனத்தில் குடித்துவிட்டு வேகமாக சென்று எதிரிகள் மீது மோதுவதுபோல் சென்று கீழே விழுந்து அதனால் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது

பொய்யாக புகார் கூறியுள்ளதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,3,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd./C.Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பூமிநாதன் | Caste: | |
| Father's Name: | முனியாண்டி | Calling: | விவசாயம் |
| Village: | கே.பாப்பான்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 45 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 13.08.2025

(2 முதல் 3 எதிரிகள் ஆஜர் .1ம் எதிரி ஆஜர் இல்லை. 355ன் பிரிவின் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா கே பாப்பான்குளத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த சாமுவேல் மகன் முனியாண்டியை எனக்கு தெரியும். கடந்த 07.08.2020ம் தேதி பாப்பான்குளத்தில் இருந்து கமுதி சென்றுவிட்டு இரவு 10.00 மணியளவில் பாப்பான்குளம் வருவதற்காக வந்துகொண்டிருந்தோம். சின்னஓடை அருகே உள்ள முத்துநாகு சமாதி அருகே வந்துகொண்டிருந்தபோது கமுதி டிஎஸ்பி சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் மகசர் தயார் செய்தார். அதற்கு சாட்சியாக என்னிடமும் முனியாண்டியிடமும் கையெழுத்து வாங்கினார். பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. முதலில் உள்ள கையெழுத்து முனியாண்டியுடைது. அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2.** இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் விவசாய வேலை பார்க்கிறேன். நான் காலை 5 மணிக்கு போனால் மாலை 5 மணிக்குதான் வருவேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியும். நான் ஒரு கையெழுத்துதான் போட்டேன். புகார்தாரர் ராக்கம்மாள் எனக்கு மதினி. மற்ற சாட்சிகள் உறவினர்கள். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் நான் கமுதிக்கு போய்விட்டு ஊருககு திரும்பி வரும்போது சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாகுசமாதி அருகே டிஎஸ்பி வந்து விசாரிக்கவில்லை என்றும் அங்கு நான் கையெழுத்து செய்யவில்லை என்றும் பின்னிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுதது செய்தேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ராக்கம்மாள் அவரது கணவர் , மகன் மற்றும் முனியசாமி ஆகியோர் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். என்னை விசாரித்து கையெழுத்து வாங்கியதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். யார் எழுதியது என்றால் டிஎஸ்பி எழுதினார். நான் சம்பவ இடத்தில் சொன்ன நேரத்தில் இல்லை என்றும் பின்னிட்டு காவல்நிலையத்தில்

வைத்து உறவினர்கள் என்பதால் கையெழுத்து செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரில்ல.

Sd./C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)